## காயல்பட்டணம் நகராட்சியின் 12.10.2021ம் தேதிய அவசரக்கூட்டம்

**மன்றப்பொருள்: 1**

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்து அதன்மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/21/EA2 நாள்.02.10.2021 ன்படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின்படி காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீர் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. எலக்ட்ரிசியன் (Grade – II) - 3
2. உதவியாளர் - 9

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளின்படி வெளிகொணர்வு முகமை மூலம் (outsource) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி குடிநீர் பணிகளை திறம்பட மேற்கொள்ள ரூ. 174.51 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரனைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2154 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள்: 2**

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்து அதன்மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/21/EA2 நாள்.02.10.2021 ன்படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின்படி காயல்பட்டணம் நகராட்சியில் தெருவிளக்கு பணிகளை மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. மின் பணியாளர் - 3
2. மின் உதவியாளர் - 3

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளின்படி வெளிகொணர்வு முகமை மூலம் (outsource) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி தெருவிளக்கு பணிகளை திறம்பட மேற்கொள்ள ரூ. 60.30 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரனைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2155 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**
**மன்றப்பொருள்: 3**

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்து அதன்மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/21/EA2 நாள்.02.10.2021 ன்படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின்படி காயல்பட்டணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. தூய்மைப்பணியாளர் - 78
2. மேற்பார்வையாளர் - 7
3. ஓட்டுநர் - 10
4. மின்னாளர் - 1

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளின்படி வெளிகொணர்வு முகமை மூலம் (outsource) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை பணிகளை திறம்பட மேற்கொள்ள ரூ. 635.94 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரனைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2156 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள்: 4**

காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதிய LED தெருவிளக்குகள் மட்டும் அமைத்தல் பணிகளை செய்திட தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2157 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள்: 5**

காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் நகராட்சியின் மூலம் புதியதாக மின் கம்பம் மின் வயர் அமைத்து புதிய LED தெருவிளக்குகள் அமைத்தல் பணிகளை செய்திட தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.45.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2158 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள்: 6**

காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதிய மின் கம்பம் அமைத்து புதிய LED தெருவிளக்கு அமைத்தல் பணிகளை செய்திட தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 82.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2159 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

**மன்றப்பொருள்: 7**

காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதிய மின் கம்பம் மின் வயர் அமைத்து புதிய LED தெருவிளக்கு அமைத்தல் பணிகளை செய்திட தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 23.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2160 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி

**<u>காயல்பட்டணம் நகராட்சி 29/10/2021 தேதிய மாதம் சாதாரண கூட்டம்</u>**

**<u>மன்றப்பொருள் 1.</u>**

காயல்பட்டணம் நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் ஒராண்டு காலம் தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு செய்திட, உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்றிடவும், குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் தொகையினை அனுமதித்து அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மற்றும் மேற்படி செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2161 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

(ந.க.எண்.1013/2016/சி2)

<u>மன்றப்பொருள் 2</u>

காயல்பட்டணம் நகராட்சிக்கு உட்பட்ட மீனவ கிராமங்களிலுள்ள 73 புதிய மீனவப்பயனாளிகளிடம் (41 மீனவ பயனாளிகள் மற்றும் 32 மீனவ மகளிர் பயனாளிகள்) மீன்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றம் சம்பந்தப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தலைவர் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1125/அ3/2021 நாள் 25.10.2021 ன் படி இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியலில் உள்ள பயனாளிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதப்படி, சுகாதார ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு, அனைவரும் (73 நபர்கள்) வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள் என சான்றளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

| வ.எண். | மீனவ கிராமத்தின் பெயர் | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கடையக்குடி | கொம்புத்துறை | 13 | கொம்புத்துறை | 14 |
| 2 | கற்புடையார் பள்ளி வட்டம் | சிங்கித்துறை | 28 | சிங்கித்துறை | 18 |
| | | மொத்தம் | 41 | மொத்தம் | 32 |

**தீர்மான எண்.2162 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப்பொருள் – 3

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் அ5/0417/2021 நாள் 20.10.20212 ன்படி, காயல்பட்டணம் நகராட்சி பகுதியில், திரு.L S M. முகமது நிஜாமுதீன், ஹாஜி அப்பா தைக்கா தெருவில் இருந்த நபர் கோவிட்–1 தொற்று காரணமாக இறந்து விட்டார் எனவும் அன்னாரின் குடும்பத்திற்கு (குழநதையின் பெயர் பாத்திமா அஃபியா) மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள நிவாரண நிதி வழங்கும் பொருட்டு, இந்நகராட்சியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் பட்டியலில் ஏற்கனவே 244 குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்த குடும்பத்தினை 245 வதாக பட்டியலில் சேர்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2163 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப்பொருள் –4

நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உதரவின்படி, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் களப்பணியாளர்களை நியமனம் செய்திட ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதற்கு, மௌலிஸ் விளம்பர சேவை பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய விளம்பர தொகையில் இந்நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.5487/– (ஐந்தாயிரத்து நாநூற்றி எண்பத்தி ஏழு மட்டும்) ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து காசோலையாக வழங்கி செலவு செய்ததனை மன்ற அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2164 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**.

கோப்பு எண். ந.கஎண். 785/2013/எச்.1

மன்றப்பொருள் 5

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2021ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.2165 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி